செ.வெ.எண்:259 நாள்:20.04.2018

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் மூன்றடைப்பு பகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சியின் மூலம் திறந்து வைக்கப்பட்ட துணை மின்நிலையத்தின் பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

------

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் மூன்றடைப்பு பகுதியில் தீன்தயாள் உபாத்திய கிராம் ஜோதி யோஜனா திட்டத்தின் கீழ் 353.21 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட துணை மின்நிலையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி காட்சியின் மூலம் இன்று (20.04.2018) திறந்து வைத்தார். மூன்றடைப்பு துணை மின்நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் குத்துவிளக்கேற்றி துணை மின்நிலைய பணிகளை தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன் அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்தாதவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் பற்றாக்குறையில் இருந்த தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றினார்கள். அவர்கள் விழியில் வந்த அம்மாவின் அரசு மின்பற்றாக்குறை ஏற்படாத வகையில் தொடர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று மூன்றடைப்பு பகுதியில் 353.21 லட்சம் மதிப்பீட்டிலான துணை மின் நிலையத்தினை திறந்து வைத்துள்ளார்கள். இதன் மூலம் பணக்குடி, செங்குளம், பெட்டானியா, மூன்றடைப்பு பருத்திபாடு, திடீயூர், ஹவுஸ்னால்புரம், அம்புராணி ஆகிய பகுதிகளை சேர்ந்த 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பயன்பெறுவார்கள் தொடர்ந்து தமிழக அரசின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை பொறியாளர் திருமதி.பேல்மெர்ட்டில்லா, கண்காணிப்பு பொறியாளர் திரு.இளம்பரிதி, செயற்பொறியாளர் திரு.ராஜன் ராஜ், முக்கிய பிரமுகர்கள் திரு.பரணி சங்கரலிங்கம், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஜெரால்டு, திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.மாதவன், திரு.வேல்முருகன், திரு.கபிரியல் ராஜன், திரு.நடராஜன், மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர் திரு.முத்துகுமார், உதவி பொறியாளர் திரு.அணில்குமார் மற்றும் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.

************